<u>முதன்மை சார்பு நீதிமன்றம், செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்.</u>

எம்.சி.ஓ.பி. எண். 150/2023

| | | |
|---|---|---|
| மனுதாரர் தரப்பு சாட்சி | .. | 1 |
| பெயர் | .. | காந்தி |
| தகப்பனார் / கணவர் பெயர் | .. | |
| வயது | .. | |
| தொழில் | .. | |
| கிராமம் | .. | |
| தாலுக்கா | .. | |

2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 05ஆம் நாள் செவ்வாய்கிழமை திரு. நா. சுரேஷ், எம்.எல்., முதன்மை சார்பு நீதிபதி, செய்யாறு அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதி செய்யப்படுகிறது.

குறுக்கு விசாரணை

விபத்தின்போது நான் இருசக்கர வாகனத்தில் சென்றேன். இராணிப்பேட்டை அமிர்தா ஓட்டலில் சாப்பாடு வாங்கிக்கொண்டு திரும்பி வரும்போது பெட்ரோல் பங்க் அருகே சாலையை கடப்பதற்காக நின்றுகொண்டிருந்தபோது தான் விபத்து நடந்தது. ஸ்பெளன்டர் பதிவு எண். டி.என். 73 எ டி 1813 வாகனம் மோதியது. நான் திடீரென்று சாலைவிதிமுறைகளை பின்பற்றாமல் சாலையை கடந்ததால்தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்திற்கு பிறகு நான் வாலாஜா அரசு மருத்துவமனையில் சேர்ந்து பின்பு காஞ்சிபுரத்தில் உள்ள கவிதா மருத்துவமனையில் 4 நாட்கள் சிகிச்சை பெற்றேன். சிகிச்சை எடுத்துக்கொண்டதற்கான மருத்துவ ரசீதுகளை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். கவிதா மருத்துவ குறிப்பினை தாக்கல் செய்யவில்லை. நான் வேறு காப்பீட்டு நிறுவனத்தில் இழப்பீடு பெற்றுக்கொண்டதால் தான் மருத்துவ குறிப்பு மற்றும் மருத்துவ பில்களை

நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அதேபோல நான் தாக்கல் செய்துள்ள ம.த.சா.ஆ.3 ஆவணம் ஊனச்சான்று ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றால் சரியல்ல. ம.த.சா.ஆ.11 ஆவணம் விபத்திற்கு பிறகு சிகிச்சை அளித்ததற்கான வழக்கிற்கு பிறகு உற்பத்தி செய்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், அந்த ஆவணத்தின் புகைப்பட நகல் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றால் சரியல்ல. ஸ்பௌன்டர் பதிவு எண். டி.என். 73 எ டி 1813 வாகனத்தை ஓட்டிய ஓட்டுநருக்கு தகுந்த ஓட்டுநர் உரிமம் இல்லாததால் காப்பீடு விதிமீறல் நடந்துள்ள நிலையில் 2ம் எதிர்மனுதாரர் எந்தவித இழப்பீடும் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. மேலும் ம.த.சா.ஆ.10ன் படி மேற்படி இருசக்கர வாகனத்தை ஓட்டிய நபருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்று தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மனுதாரர் மனு 2ம் எதிர்மனுதாரர் பொறுத்து தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. மோட்டார் வாகன திருத்த சட்டத்தின்படி 2ம் எதிர்மனுதாரர் எந்தவித இழப்பீடும் மனுதாரருக்கு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல.